# குடியரசின் ஒருங்கிணைப்பு ஒப்பந்தம்

அம்மணி, ஐயா,

உங்கள் பிரெஞ்சு குடியரசின் ஒருங்கிணைப்பு ஒப்பந்தத்தில் (CIR) கையொப்பமிட நீங்கள் இப்போது பிரெஞ்சு குடிவரவு மற்றும் ஒருங்கிணைப்பு (OFII) அலுவலகத்திற்கு வந்துள்ளீர்கள்.

இவ்வாறு, நீங்கள் உங்கள் குடியேற்ற நாடான பிரான்சில் நிரந்தரமாக தங்கி வாழ விரும்பும் விருப்பத்தை வெளிப்படுத்தி, உங்கள் தனிப்பட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கையில் ஈடுபடவும் உறுதி அளிக்கிறீர்கள்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், உங்களுக்கு உரிமை உண்டு, ஆனால் நீங்கள் சில விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும் மற்றும் கடமைகளையும் ஆற்ற வேண்டும்.

### பிரெஞ்சு குடியரசின் ஒருங்கிணைப்பில் உங்கள் தனிப்பட்ட பயனுக்கான நடவடிக்கையில் ஈடுபாடு

இன்றைய தனிப்பட்ட நேர்காணல் உங்கள் தேவைகளை மதிப்பீடு செய்யவும், உங்களுக்கான பயிற்சிகளை பரிந்துரை செய்யவும் மற்றும் உங்கள் தனிப்பட்ட சூழ்நிலைக்கேற்ப உங்களை வழிநடத்தவும் உதவுகிறது.

- குடிமைப் பயிற்சி

உங்கள் குடியேற்ற வாழ்க்கை 24 மணி நேர கட்டாய குடிமைப் பயிற்சியுடன் தொடங்கும்.

- மொழிப் பயிற்சி

உங்கள் மொழியறிவு ஐரோப்பிய ஐக்கியத்தின் மொழி நிலைக்கான பொது அளவுகோலின் (CECRL) A 1 நிலைக்கு குறைவாக இருந்தால், நீங்கள் அந்த நிலைக்கு முன்னேற மொழிப்பயிற்சி எடுக்க வேண்டும். இவ்வாறாக அன்றாட வாழ்வின் தொடர்புகளுக்கு தேவையான பிரெஞ்சு மொழியறிவை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

- வேலைவாய்ப்புக்கு உதவி

உங்கள் வேலை நிலைமை மற்றும் உங்கள் வேலை தேடல் தேவைகளுக்கிணங்க பொருத்தமான பொது வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கு வழிக்காட்டப்படுவீர்கள்

- தகவல்கள்

நீங்கள் உங்கள் உரிமைகள் மற்றும் நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய பொது சேவைகள் (பள்ளிகள், மருத்துவமனைகள், சமூகப் பாதுகாப்பு ...) ஆகியவற்றை பற்றிய தகவல்களைப் அறிந்து பயனடயலாம்.

உங்கள் தனிப்பட்ட சூழ்நிலை மற்றும் உங்கள் குடியேற்ற வாழ்க்கை பயணத்தை தொடர தேவையான தகவலை உங்களுக்கு வழங்குவதற்கு இரண்டாவது நேர்காணல் ஒப்பந்தத்தின் முடிவில் மேற்கொள்ளப்படும்.

### பிரெஞ்சு குடியரசின் ஒருங்கிணைப்பு ஒப்பந்தத்தை (CIR) கடைப்பிடித்தல், பல வருட குடியிருப்பு அனுமதி வழங்கப்படுவதற்கான நிபந்தனையாகும்.

CIR ஒப்பந்தத்தில் (கையொப்பமிடுவதன் மூலம், பரிந்துரைக்கப்படும் குடிமைப் பயிற்சி மற்றும் மொழிப் பயிற்சி ஆகியவற்றை விடாமுயற்சியுடனும் தீவிரமாகமாகவும் மேற்கொள்ள உறுதியளிக்கிறீர்கள்

நீங்கள் பிரெஞ்சு சமுதாயம் மற்றும் குடியரசு இவற்றின் அத்தியாவசிய மதிப்புகளையும் மதித்து நடக்க நீங்கள் கடமைபட்டுள்ளீர்கள்.

இந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்தால், பல வருட குடியிருப்பு அனுமதி உங்களுக்கு வழங்கப்படும்.

### குடியேற்ற வாழ்க்கை நீடிப்பும் குடியிருப்பு அனுமதி அட்டை வழங்கலும்

பிரெஞ்சு மொழியை ஆழமாகக் கற்பதன் மூலம், பிரெஞ்சு குடியரசில் உங்கள் தனிப்பட்ட ஒருங்கிணைப்பை நீங்கள் தொடரலாம்.

நீங்கள் குடியிருப்பு அனுமதி அட்டை பெற விரும்பினால், உங்கள் பிரெஞ்சு மொழியறிவு ஐரோப்பிய ஐக்கியத்தின் மொழி நிலைக்கான பொது அளவுகோலின் (CECRL) A 2 நிலையை எட்டியிருக்க வேண்டும். மேலும் நீங்கள் பிரெஞ்சு குடியரசின் ஆட்சி கோட்பாடுகளை திறம்பட அனுசரிக்க வேண்டும்.

உங்கள் பிரெஞ்சு மொழியறிவு ஐரோப்பிய ஐக்கியத்தின் மொழி நிலைக்கான பொது அளவுகோலின் (CECRL) வாய்வழி B 1 நிலையை எட்டியிருக்க வேண்டும்.

இந்த இரண்டு பிரெஞ்சு மொழியறிவு நிலைகளுக்கும், OFII மொழிப் பயிற்சி வழங்குகிறது.

*அக்டோபர் 4, 1958 ஆண்டு பிரெஞ்சு அரசியலைமப்பின் 1-ஆம் பிரிவு கூறுவதாவது :*
*"பிரான்ஸ் ஒரு பிரிக்க முடியாத, மதச்சார்பற்ற, ஜனநாயக மற்றும் சமூகக் குடியரசு ஆகும். பிறப்பு, மதம், இனம் ஆகிய வேறுபாடுகள் இல்லாமல் அனைத்து குடிமக்களுக்கும் சட்டத்தின் முன்* ***பிரான்ஸ்*** *சமத்துவத்தை உறுதி செய்கிறது. அனைத்து நம்பிக்கைகளையும் பிரான்ஸ் மதிக்கிறது. அதன் அமைப்பு பரவலாகபப்பட்டது. தேர்தல்களிலும் அதன் செயல்பாடுகளிலும், தொழில் மற்றும் சமூகப் பொறுப்புகளிலும் சட்டம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமாக இடமளிக்கிறது."*

# குடியரசின் ஒருங்கிணைப்பு ஒப்பந்தம்

Liberté • Égalité • Fraternité
RÉPUBLIQUE FRANÇAISE

**பிரெஞ்சு குடியரசின் ஒருங்கிணைப்பு ஒப்பந்தம்.**

**வெளிநாட்டினர் நுழைவு மற்றும் குடியிருப்பு மற்றும் புகலிட உரிமை சட்டத் தொகுப்பின் 311-9-ஆம் பிரிவில் வறையறுத்துள்ளபடி பிரெஞ்சு குடியரசின் ஒருங்கிணைப்பு ஒப்பந்தம் உங்களுக்கும் அரசு அதிபர் பிரதிநிதித்துவம் கொண்ட பிரெஞ்சு அரசுக்கும் இடையிலானது**. **இருதரப்பின் பரஸ்பர கடமையை அடிப்படையாக கொண்டது**.

## I. அரசின் கடமைகள்

உங்கள் ஒருங்கிணைப்பை எளிதாக்க அரசு வரவேற்பு மற்றும் ஆதரவு அமைப்பை ஏற்பாடு செய்கிறது. இதில் பின்வரும் சேவைகள் உள்ளன:

- பிரெஞ்சு குடியரசின் ஒருங்கிணைப்பு செயல்முறையை விளக்குவதற்கு கூட்டம் ;
- உங்கள் தேவைகளை மதிப்பீடு செய்து, உங்கள் தனிப்பட்ட சூழ்நிலைக்கு ஏற்ப பயிற்சி அளிக்கவும், வழிகாட்டவும், OFII மதிப்பீட்டாளர் ஒருவருடன் தனிப்பட்ட நேர்காணல்;
- பிரெஞ்சு குடியரசின் கோட்பாடுகள் மற்றும் மதிப்புகள், அத்துடன் நடைமுறை அம்சங்களில் பிரெஞ்சு சமூகத்தின் செயல்பாடு ஆகியவற்றை புரிந்து கொள்ள ஒரு குடிமைப் பயிற்சி ;
- பிரெஞ்சு மொழியில் உங்கள் நிலைமையை அறிந்து கொள்ள OFII- இல் நடத்தப்படும் மொழிபுலமை சோதனை ;
- தேவைப்பட்டால், ஒரு மொழிப் பயிற்சி ஏற்பாடு செய்யப்படும். அதன் தேவைகளும் காலமும் CECRL அளவுகோலின் A1 குறிப்பிற்கிணங்க வரையறுக்கப்படும். நீங்கள் A1 அளவை அடைந்தால், சான்றிதழ் பெறுவதற்கான சோதனை நடத்த முடியும்;
- நீங்கள் விலக்கு கேட்காதவரை, பொது வேலைவாய்ப்பு சேவையின் கட்டமைப்புகளுடன் இணைந்து, தொழில்சார் வழிகாட்டல் மற்றும் உங்கள் வேலைவாய்பிற்கான உதவி ;
- பின்பற்றப்பட்ட படிப்புகள் மற்றும் குடியேற்ற வாழ்க்கையில் ஏற்கனவே நிறைவு செய்த காரியங்களை பற்றி அறியவும் மற்றும் உங்கள் தனிப்பட்ட சூழ்நிலையின்படி உங்கள் நோக்குநிலையை நிறைவு செய்வதற்காக, ஒப்பந்த முடிவில் OFII மதிப்பீட்டாளருடன் இரண்டாவது நேர்காணலுக்கு அழைக்கப்படுவீர்.

## II. உங்கள் கடமைகள்

கீழ்க்கண்டவற்றை செய்ய நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள்:

- பிரெஞ்சு சமூகம் மற்றும் குடியரசின் அத்தியாவசியமான மதிப்பை மதித்தல்;
- விடாமுயற்சியுடனும் தீவிரமாகவும் குடிமைப் பயிற்சி மற்றும் மொழிப் பயிற்சியில் பங்கேற்றல் ;
- OFII அழைக்கும் பொழுது இறுதி ஒப்பந்த நேர்காணலுக்கு செல்லுதல்;
- OFII ஆல் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளை, குறிப்பாக தொழில்முறை ஆதரவுக்காக (விலக்கு தவிர) குறிப்பிடப்பட்டவற்றை செய்தல் ;
- நிலைமையில் மாற்றம் ஏதும் இருப்பின், கடிதம் ஊடாக அறிவித்தல்.

## III. ஒப்பந்த காலம்

CIR ஒப்பந்த காலம் ஒரு வருடமாகும். விதிவிலக்காக, நியாயமான காரணங்களுக்காக, கூடுதலாக ஒரு வருட காலம் அரசு அதிபரால் அது நீடிக்கப்படலாம்.

நீங்கள் ஆர்வம் மற்றும் தீவிரத்தன்மை நிபந்தனைகளை மதிக்கவில்லையென்றாலோ, பிரெஞ்சு சமூகம் மற்றும் குடியரசின் அத்தியாவசியமான மதிப்புகளை நிராகரிப்பதை நீங்கள் வெளிப்படுத்தியிருந்தாலோ, OFII-இன் பரிந்துரையின் அடிப்டையில் அரசு அதிபரால் CIR நீக்கப்படலாம்.

**இன்றைய நேர்காணலின் முடிவில் உங்கள் தனிப்பயனாக்கப்பட்ட நோக்குநிலை.**

- பின்வரும் பயிற்சிகள் பரிந்துரைக்கப்படும் :

- **குடிமைப் பயிற்சி "குடியரசின் மதிப்புகளை சேர்ந்து வாழ்வோம்"**

☒ கட்டாயம்

- **மொழிப் பயிற்சி**

☐ A1 நிலை அடையப்பட்டது (மொழிப் பயிற்சி விலக்கு)

☐ A1 நிலை அடையப்படவில்லை (ஒரு மொழிப் பயிற்சி பரிந்துரை)

பரிந்துரைக்கப்பட்ட பாடநெறியின் முடிவில் A1 அடையப்பட்டால், அப் பயிற்சி முன்கூட்டியே நிறுத்தப்படும்.

**•பொது வேலைவாய்ப்பு சேவை**

நீங்கள் பின்வரும் வேலைவாய்ப்பு சேவைகளுக்கு வழிக்காட்டப்படுவீர்கள்:

☐ நீங்கள் வேலைவாய்ப்பு சேவைகளுக்கு வழிக்காட்டப்படுவீர்கள்:

☐ ஒப்பந்தத்தில் கையொப்பமிடுபவரின் கோரிக்கையின் பேரில் தொழில்முறை ஆதரவிலிருந்து விலக்கு..

CIR ஒப்பந்தமே பிரான்சில் உங்கள் ஒருங்கிணைப்பிற்கான முதல் படியாகும். அதன் உரிமைகள் மற்றும் கடமைகளை நீங்கள் மதிக்க வேண்டும். இதுவே குடியேற்ற நாட்டில் உங்கள் வெற்றிகரமான ஒருங்கிணைப்புக்கான உத்தரவாதம்.

**பிரெஞ்சு குடியரசின் ஒருங்கிணைப்பு ஒப்பந்த எண்:**
திரு / திருமதி (சிறார்களுக்கு, சட்ட பிரதிநிதி):

AGDREF எண் :
கையொப்பம்:

மற்றும் மாகாண அரசு அதிபர் :

இடையே --/--/---- அன்று முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தம்.

"பிரான்சில் என் ஒருங்கிணைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக பிரெஞ்சு குடியரசின் ஒருங்கிணைப்பு ஒப்பந்தத்தின் பயிற்சிகளை சிறந்த முறையில் பின்பற்றுவதற்காக, ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதன் மூலம், என் விண்ணப்பத்தின் செயலாக்கத்திற்காக தனிப்பட்ட CIR நேர்காணல் -இன் ஒரு பகுதியாக தேவையான தரவு சேகரிக்கப்படவும், சேமிக்கப்படவும், செயலாக்கப்படவும், பயன்படுத்தப்படவும் மற்றும் OFII சேவை வழங்குநர்களுக்கும் மற்றும் அரசு அதிபர் நிர்வாக பிரிவுகளுக்கு பரிமாற்றப்படவும் நான் ஒப்புக்கொள்கிறேன். ஒப்பந்தத்தின் கையொப்பத்தேதியிலிருந்து அதிகப்படசம் 5 வருடங்கள் வரை எனது தனிப்பட்ட தரவு வைக்கப்படும்.
ஐரோப்பிய ஒழுங்குமுறை 2016/679-க்கிணங்க, என் தனிப்பட்ட தரவை அணுகவும், திருத்தவும் எனக்கு உரிமை உள்ளது, இது தொடர்பாக நான் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி பின்வருமாறு : OFII, தரவு பாதுகாப்பு அலுவலரின் கவனத்திற்கு, , 44 rue Bargue, 75015 Paris. செயலாக்க பொறுப்பாளர் தலைமை நிர்வாகி ஆவார், அவரை கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம்: OFII, செயலாக்க பொறுப்பாளர் கவனத்திற்கு, 44 Rue Bargue, 75015 Paris. "